**57 வலை வீசிய படலம்**

சோமசுந்தரர் அன்னை மீனாட்சிக்கு தனியிடத்தில் வேதத்தின் அதி ரகசியமாக உட்பொருளை உபதேசித்தார் அன்னை விருப்பமின்றி அதைக் கேட்டமையால், கோபம் கொண்ட ஐயன் , மீனவர் மகளாகப் பிறக்குமாறு சபித்தார். அன்னை அப்பனை பிரிந்து வாழ் வதெப்படி என்று தவித்தார். ஐயன் திருவுள்ளம் இறங்கி மீனவப் பெண்ணாய் வாழ்கையில் தாமே வந்து திருமணம் செய்துக் கொள்வதாக வாக்களித்தார்.

இதை அறிந்த வினாயகரும், முருக்ககடவுளும் இந்நிகழ்வுக்குக் காரணம் இந்தச் வேத சுவடிகளால் தான் நிகழ்ந்தது என்றுஎண்ணிஅவற்றை கடலில் வீசி எறிந்தனர். இந்த சமயத்தில்அவர்களை உள்ளே அனுமதித்த நந்திதேவரை சூறா மீனாக கடலில் வாழ சபித்தார் வினாயருக்கு விதிக்கும் சாபம் தன்னையே வந்துசேரும் என்ற காரணத்தினால் அவரசபிக்காமல முருகனைவணிக குலத்தில் ஊமைப் பிள்ளையாகப் பிறந்திட சபித்தார்.

பாண்டிய நாட்டின் கீழைக்கரை கடலோரம் பாக்கம் என்ற ஊரில் மீனவர்கள் வசித்துவந்தனர்.சிவபெருமானிடம் மிகுந்த அன்பு பூண்ட அரசன் ஒருவன் ஆண்டு வந்தான். அவன் பலகாலம் மகப் பேரின்றி வாடினான். ஒரு நாள் சுற்றத்தாரோடு அவன் கடலுக்கு செல்லும் போது, ஒரு புன்னை மர நிழலில் அன்னை குழந்தையாகப் படுத்து அழுதுக்கொண்டிருந்தது.

குழந்தையைக் கண்ட மன்னன் தன் குறை நீக்கவே ஐயன் அருளினார் என்று மகிழ்ந்தான். குழந்தையுடன் அரண்மனைக்குஎடுத்துச் சென்று தன் மகளாக அக்குழந்தையை வளர்த்தான்.
இறைவன் பணித்த படி நந்தி சுறா மீன் வடிவம் கொண்டு கடலில் வீசப்பட்ட வேத நூல்களைதன் சிரசில் தாங்கி காத்து வந்தது. மிகவும் வலிமையான சுறாமீனாக வளர்ந்துதோணிகளையும், மரக் கலங்களையும் கடலிலே போக முடியாத படி தடுத்தது. மீனவ மன்னன் மிகுந்த சிரம்பட்டும் அச்சுறாவை பிடிக்க முடியவில்லை. எவன் அம்மீனை பிடிக்கிறானோஅவனுக்கே தன் மகளைத் திருமணம் செய்து தருவதாக அறிவித்தான் அந்த அரசன்.

அம்மையை மணக்க ஐயன், ஒரு மீனவன் போல் வடிவம் கொண்டு வலையை தன் தோளில் சுமந்து அங்கு எழுந்தருளினார். தன்னை யாரென்று கேட்ட அரசனிடம், தான் மதுரை மீனவ அரசனின் மகனென்றும், தான் மீன் பிடிப்பதில் வல்லவன் என்றும் அறிமுகப்படுத்திக் கொண்டார். அவனை சோதிக்க எண்ணம் கொண்ட அரசன், சுறா

கொடுக்கும் தொல்லைகளைக் கூறி அதனைப் பிடித்தால் தன் மகளை திருமணம் செய்து தருவதாகக் கூறினான்.

உடனே கடலுக்குச் சென்ற வலைஞன் வலை வீசி மீனைப் பிடித்துக் கரையில் போட்டார். தான் கூறிய படி அரசன் தன் மகளை வலைஞனுக்கு திருமணம் செய்துக் கொடுத்தார். திருமணம் பூண்ட வலை ஞத்தம் பதியர் சிவனும் உமையுமாக விண்ணில் எழுந்து காட்சி தந்தனர். சுறா மீனாகிய நந்தியும் பழய வடிவம் பெற்றது. மீனவத் தலைவன் இருவரையும் வணங்கினான். ஐயன்அவனுக்கு சிவலோகம் அடைய அருள் புரிந்து நந்தி தேவரோடும் அடியார்களோடும் உத்திரகோசமங்கை என்னும் தலத்தையடைந்தார்.

அங்கு உமாதேவிக்கு வேதத்தின் ரகசிய பொருளை உபதேசித்தார். அப்போது அன்புடன் அறுபதினாயிரம் சிவனடியார்களுக்கும், சிவயோகிகளுக்கும் வேத்தின் பொருளை உபதேசித்தார். எல்லோர் பற்றையும் ஒழித்து வீடு பேற்றை அளித்து அங்கயற் கன்னியுடன் மதுரையம் பதி அடைந்தார்.

**பல்லவி**

வேதப் பொருள் கேட்பதில் அலட்சியமாயிருந்த - மீ
னாட்சியை மீனவகுல பெண்ணாகிட சபித்தீர்

**அனுபல்லவி**

வேத நூலை கோபத்துடன் பிள்ளைகள் கடலில் வீச
வாசல் காவல் நந்தியை சுறாமீனாகிட சபித்தீர்

**சரணம்**

தொல்லை தரும மீனைப் பிடித்து தருபவர்க்கு தம் பெண்ணை
மணம் முடித்துத் தருவதாய் மன்னன் சொன்னான்
வல்லவனாக மீன்ப்பிடித்து நந்தி வடிவம் பெற
உத்தர கேசமங்கையில் பின் உமைக்கு வேதம் ஓதினீர்